FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
குற்றவியல் நடைமுறைச் சட்டம் 154 இன் கீழ்

Under section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109726

1. District : அரியலூர் PS: ஆண்டிமடம் Year: 2026 FIR No.: 01 Date: 28.02.26
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச்சட்டம் Sections பிரிவுகள்: 7 of pc Act 1988
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: as amended in 2018
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் 26.02.26 நாள் முதல் 27.02.26 நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு 11.30 Hrs நேரம் முதல் 14.00 Hrs நேரம் வரை

(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.02.26 நேரம் 07.00 Hrs

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.02.26 நேரம் 07.00 Hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய்மொழியாக எழுத்துமூலம் (சுருக்கெழுத்து மூலம் பெறப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தெற்கு திசையில் 5 கி.மீ தொலைவில்

Beat Number : (b) Address : அருகில் ஒரு பெட்ரோல் நிலையம்
முறைக் காவல் எண் முகவரி அருகில் கோட்டை, பிரபுநாதன் (po), சிங்கம் மலை

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : கார்த்திகேயன் (b) Father's/ Husband's Name : [illegible]
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 45/26 (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address : [illegible], அருங்கோட்டை, பிரபுநாதன் (po)
தொழில் முகவரி அரியலூர் (DT)

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

தெரிவிக்கப்படுகிறது, பெயர் தெரியாத, TNSTC
ஒரு பெட்ரோல் நிலையம், அருங்கோட்டை, அரியலூர் (DT)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28/2/2026 28.02.26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

28.02.26 at 11.00hrs

Name: பெயர் ..... Rank: நிலை ..... Bk. எண் .....

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 01/2026 முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-க்கான இணைப்பு:-

28.02.2026-ம்தேதி காலை 07.00 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் இருந்தபோது அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், ஸ்ரீபுரந்தான் அஞ்சல், அரங்கோட்டை கிராமம், நடுத்தெரு என்ற முகவரியில் வசிக்கும் குருநாதன் மகன் கார்த்திகேயன் என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவினை பெற்று, அதுகுறித்து சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார் மனுவில் கூறப்பட்டுள்ள அரங்கோட்டை நேரடி நெல் கொள்முதல் நிலைய பட்டியல் எழுத்தர் திரு.தேவேந்திரன் என்பவரின் முன் நடத்தைகள் பற்றி விசாரணை மேற்கொள்ளப்பட்டு, இன்று 28.02.2026 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 01/2026, சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தம் 2018)-ன்படி வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் கு.கார்த்திகேயன், வயது 45, த/பெ. குருநாதன், நடுத்தெரு, அரங்கோட்டை, ஸ்ரீபுரந்தான் (Po), உடையார்பாளையம் (Tk), அரியலூர் மாவட்டம். பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, அரியலூர். அம்மா, நான் அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், ஸ்ரீபுரந்தான் அஞ்சல், அரங்கோட்டை கிராமம், நடுத்தெரு என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் MCA வரை படித்துள்ளேன். எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. நான், எனது அம்மா வைஜெயந்திமாலா, எனது அண்ணன் சுதாகர் ஆகியோர் கூட்டு குடும்பமாக வசித்து வருகிறோம். நானும் எனது அண்ணனும் விவசாயம் செய்து வருகிறோம். தற்போது சம்பா பருவத்தில் நெல் பயிரிட்டு, அறுவடை செய்தோம். அறுவடை செய்த நெல்லினை எங்கள் ஊரில் உள்ள TNCSC நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விற்பனை செய்வதற்காக கடந்த 26.02.2026 அன்று காலை சுமார் 11.30 மணியளவில் எடுத்துச்சென்றேன். அப்போது அங்கு பட்டியல் எழுத்தர் திரு.தேவேந்திரன் மற்றும் லோடுமேன் திரு.தங்கமணி ஆகியோர்கள் பணியில் இருந்தனர். அவர்களிடம் எனது அண்ணன் சுதாகர் பெயரில் நெல்லினை எடுத்துக்கொள்ள கேட்டு, எங்களது நிலத்தின் ஆவணங்கள், எனது அண்ணன் வங்கி கணக்கு புத்தகத்தின் நகல் மற்றும் ஆதார் நகல் ஆகியவற்றினை கொடுத்தேன். அவற்றினை பட்டியல் எழுத்தர் தேவேந்திரன் வாங்கி பார்த்துவிட்டு எல்லாம் சரியாக உள்ளது, நெல்லினை எடுத்துக்கொள்கிறோம், நெல்லை கொள்முதல் செய்வதற்கு ஒரு மூட்டைக்கு ரூ.35/- வீதம் பணம் கொடுக்க வேண்டும் என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் அவரிடம் எதற்காக சார் என்னிடம் பணம் கேட்கிறீங்க என்று கேட்டேன். அதற்கு அவர் நெல் எடை போட்டதும் எத்தனை மூட்டை வருமோ, அத்தனை மூட்டைக்கும், மூட்டைக்கு ரூ.35/- வீதம் கணக்கு பண்ணி பணம் கொடுக்கனும், அப்படி கொடுத்தாத்தான் உங்க நெல்லை எடுத்துக்க முடியும், இல்லன்னா உங்க நெல்ல இங்க எடுக்கமாட்டோம் என்று கறாராக சொன்னார். அதற்கு நான் பட்டியல் எழுத்தரிடம் அரசு நெல் கொள்முதல் நிலையத்தில் விவசாயிகளிடம் பணம் வாங்காமல் தானே நெல் எடுக்கனும், நீங்க ஏன் மூட்டைக்கு 35 ரூபாய் கேக்குறீங்க என்று கேட்டேன். அதற்கு அவர், எங்களுக்கு தனியாக பணம் கொடுத்தாத்தான் உங்கள் நெல்லை எடுப்போம் இல்லைன்னா எடுக்கமாட்டோம் என்று சொன்னார். நான், பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று நினைத்து நெல்லை அங்கேயே ஒரு இடத்தில் கொட்டி, பத்திரமாக மூடி வைத்துவிட்டு, வீட்டிற்கு சொன்றுவிட்டேன். பின்னர் மீண்டும் நேற்று 27.02.2026-ம்தேதி மதியம் சுமார் 02.00

மணியளவில் அரங்கோட்டை நோடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சென்றேன். அப்போது அங்கே பட்டியல் எழுத்தர் தேவேந்திரன் மற்றும் லோடுமேன் தங்கமணி ஆகியோர் பணியில் இருந்தனர். பட்டியல் எழுத்தர் தேவேந்திரனிடம் எனது நெல்லினை எடுத்துக்கொள்ள கேட்டேன். அப்போது அவர் மூட்டைக்கு 35 ரூபாய் கொடுக்கனும் என்று உங்களிடம் நேற்றே சொல்லிவிட்டேனே சம்மதம் என்றால் சொல்லுங்க எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்னார். அதற்கு நான் பணம் இல்லாமல் எடுக்க முடியாதா சார் என்று கேட்டேன். அதற்கு அவர், நீங்க இவ்வளவு தூரம் கேட்கிறதனால உங்களுக்காக வேணும்னா மூட்டைக்கு 35 ரூபாய் என்பதை, குறைத்துக்கொண்டு மூட்டைக்கு 28/- ரூபாய்னு கணக்குப்பண்ணி கொடுத்துடுங்க என்று கேட்டார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை என்றாலும், வேறு வழியின்றி அப்போதைக்கு விளைவித்த நெல்லை விற்க வேண்டுமே என்பதற்காக சரிங்க சார் நெல்லை எடுத்துக்குங்க, நான் பணம் கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னேன். அதன்பின்னர் எனது நெல்லினை எடை போட்டார்கள். மொத்தம் 264 மூட்டை வந்தது. பின்னர் பட்டியல் எழுத்தர் Token No. 7953260227114218-ன்படி அதற்கான ரசீதினை என்னிடம் கொடுத்து மூட்டைக்கு 28 ரூபாய் வீதம் 264 மூட்டைக்கு 7392/- ரூபாய் வருகிறது, அதனால நீங்க ரவுண்டா ரூ.7400/- கொடுத்துவிடுங்கள் என்று கேட்டார். நான், சரிங்க சார் பணத்தை ஏற்பாடு பண்ணிக்கிட்டு, நாளைக்கு வந்து பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுக்கலாம் என்று முடிவு செய்து பட்டியல் எழுத்தர் திரு.தேவேந்திரன் என்பவர் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.7400/-ஐ ரெடிப்பண்ணிக்கொண்டு வந்துள்ளேன். என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட பட்டியல் எழுத்தர் திரு.தேவேந்திரன் என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு கையொப்பம் (ஆங்கிலத்தில் ஒப்பம், தேதி 28/02/2026). **Submitted,** Sir, Received this computerised complaint from the complainant on 28.02.2026 at 07.00 hrs, verified and ascertained its genuineness through sources, and registered a case on the complaint on 28.02.2026 at 08.00 hrs in Ariyalur Vigilance and Anti-Corruption Detachment Crime No.01/2026, U/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018). (sd) B.Kavitha, Inspector of Police, V&AC, Ariyalur.

28.02.26

I am submitting the Original F.I.R. along with the complaint to the Hon'ble Court of the Principal District and Sessions Judge, Ariyalur and the copies of the F.I.R to all other concerned Officials.

28.02.26
Inspector of Police
V&AC, Ariyalur
28.02.26